குறுவை நெல்லுக்கு 24 சத ஈரப்பத தளர்வு செய்ய வலியுறுத்தல்

First Published : 25 Sep 2011 03:23:44 PM IST

தஞ்சாவூர், செப். 24: தற்போது மழை பெய்துவருவதால் குறுவை நெல் கொள்முதலுக்கான ஈரப்பத தளர்வை 24 சதமாக உயர்த்த வேண்டும் என தஞ்சையில் சனிக்கிழமை நடைபெற்ற விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு ஆலோசனைக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகை, கடலூர், திருச்சி, கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். கூட்டத்துக்கு விவசாய சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் மு. சேரன் தலைமை வகித்தார். காவிரி டெல்டா விவசாயிகள் பாதுகாப்புச் சங்கத் தலைவர் ஆறுபாதி கல்யாணம், பொதுச் செயலர் பி.என்.எஸ். தனபாலன், தாளாண்மை உழவர் இயக்கத் தலைவர்

கோ. திருநாவுக்கரசு, நமது நெல்லைக் காப்போம் இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் இரா. ஜெயராமன், தமிழக இயற்கை உழவர் இயக்க மாவட்டத் தலைவர் ப. ராமசாமி, தமிழக விவசாயிகள் சங்க மாவட்டப் பொருளாளர் துளசியய்யா உள்ளிட்டோர் பேசினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தமிழகம் முழுவதும் உற்பத்தி செய்யப்படும் நெல்லை அந்தந்த மாவட்டங்களிலேயே கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்காததால், அந்த நெல்லை குறைந்த விலைக்கு வாங்கும் வியாபாரிகள் அதை காவிரி டெல்டா மாவட்ட கொள்முதல் நிலையங்களில் விற்று கூடுதல் லாபமடைகின்றனர். இதனால், விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது. எனவே, அந்தந்த மாவட்டங்களிலேயே போதிய கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும்.

தற்போது மழை பெய்துவருவதால் குறுவை நெல்லுக்கான ஈரப்பத அளவை 17-லிருந்து 24 சதம் வரை தளர்வு செய்ய வேண்டும். அதில், 20 சதம் வரை ஈரப்பத தொகைப் பிடித்தம் இல்லாமல் கொள்முதல் செய்ய வேண்டும்.

நெல் உற்பத்திச் செலவு அதிகரித்து வருவதால், நெல் உற்பத்தி செலவுடன் கூடுதலாக 50 சதம் சேர்த்து குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசு ரூ. 2,000 விலை அறிவிக்க வேண்டும். அதுவரை, தமிழக அரசு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1,500 விலை அறிவிக்க வேண்டும். தேர்தல் நேரத்தில்

அறிவிக்க இயலாது என்றால், அக். 22-ம் தேதி அன்று தமிழக அரசின் அறிவிப்பு வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

அதுவரை, மத்திய அரசு அண்மையில் அறிவித்த நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு கூடுதல் விலை ரூ. 80 என்ற அறிவிப்பை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். தேசிய வேளாண் ஆணையத்தின் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் எனவும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

**நெல் பயிரில் புகையான் பாதிப்பை தடுக்க வழிமுறைகள்**

First Published : 25 Sep 2011 03:16:36 PM IST

தஞ்சாவூர், செப். 24: குறுவை நெல் பயிரில் ஏற்பட்டுள்ள புகையான் பாதிப்புகளைத் தடுக்க பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேளாண் அலுவலர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தஞ்சாவூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஜேசன் நரேஷ் சுந்தரபாண்டியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தஞ்சாவூர் மாவட்டத்தில் ராயந்தூர், சித்தாயல் உள்ளிட்டப் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள குறுவை நெல் பயிரில் பரவலாக புகையான் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நோய் நெல் பயிரின் அடிப்பகுதியைத் தாக்கும். இதனால், பாதிக்கப்பட்ட தூர்கள் அழுகிவிடும். பாதிப்பு அதிகமாகும் போது நெல் பயிர் புகைந்தது போல மாறிவிடும். இவற்றின் கதிர்கள் சாவியாகிவிடும்.

இதைக் கட்டுப்படுத்த விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்:

மண்ணெண்ணையை வயிலின் வாய் மடைப்பகுதியில் நான்கு மூலைகளிலும் ஊற்ற வேண்டும். இதன்மூலம், துரித இனப்பெருக்கம் தடுக்கப்படுகிறது. தண்ணீரை வடித்து வயலில் சூரிய வெளிச்சம் நன்கு படுமாறு பட்டங்களைப் பிரித்துவிட வேண்டும்.

யூரியா உரம் போடுவதைத் தவிர்க்க வேண்டும். மேலும், இம்டாகுளோபிரிட் திரவ வடிவ மருந்தை ஏக்கருக்கு 40 மில்லி லிட்டர் அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தூரின் அடிப்பாகம் நன்கு நனையுமாறு தெளித்தால் புகையான் நோயைத் தடுக்கலாம் என்றார் அவர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 91.22 அடி**

First Published : 25 Sep 2011 03:08:38 PM IST

தஞ்சாவூர், செப். 24: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 91.22 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 8,982 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து வினாடிக்கு 16,019 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து காவிரியில் வினாடிக்கு 2,501 கன அடி, வெண்ணாற்றில் வினாடிக்கு 6,000 கன அடி, கல்லணைக் கால்வாயில் வினாடிக்கு 3,004 கன அடி, கொள்ளிடத்தில் வினாடிக்கு 1,004 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**சாகுபடி பரப்பளவு குறைவால் கடலை எண்ணெய் விலை உயரும்**

செப்டம்பர் 26,2011,04:26



நடப்பு கரீப் பருவத்தில், நாட்டின் முக்கிய மாநிலங்களில், கடலை சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. இதனால், இதன் உற்பத்தியில் சரிவு நிலை ஏற்பட்டு, விலை உயர வாய்ப்புள்ளது என, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர். குறிப்பாக, குஜராத் மாநிலத்தில், கடலை உற்பத்தி, கடந்தாண்டு கரீப் பருவத்தை விட, நடப்பு பருவத்தில், 15 சதவீதம் குறைந்து, 12-13 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், கடந்த ஆண்டு, கரீப் பருவத்தில், இதன் உற்பத்தி, 16 லட்சம் டன் என்றளவில் இருந்தது. உற்பத்தி குறையும் நிலையில், அரவைக்கு வரும் கடலையின் அளவும் வெகுவாக குறையக் கூடும். இதைத்தொடர்ந்து, இதன் விலை மேலும் உயரக்கூடும். குஜராத்தில், கடலை உற்பத்தி, 10-1 5 சதவீதம் சரிவடைய வாய்ப்புள்ளது. ஏனெனில், இம்மாநிலத்தில், கடலை சாகுபடி பரப்பளவு, செப்., 12ம் தேதி வரையிலுமாக, 14.30 லட்சம் எக்டேராக குறைந்துள்ளது. இது, கடந்தாண்டு இதே காலத்தில், 16.70 லட்சம் எக்டேராக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், உள்நாட்டில், செப்., 15ம் தேதி வரையிலுமாக, கரீப் பருவத்தில், 43.20 லட்சம் எக்டேரில், கடலை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, கடந்தாண்டு இதே பருவத்தில், 47.30 லட்சம் எக்டேராக இருந்தது. நாட்டின் மொத்த கடலை உற்பத்தியில், 40 சதவீதம் எண்ணெய் உற்பத்திக்கும், எஞ்சியவை கடலை மிட்டாய் உள்ளிட்ட தின்பண்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. நடப்பு பருவத்தில், கடலை சாகுபடி பரப்பளவு குறைந்துள்ள நிலையில், இதன் உற்பத்தி அளவும் குறையக் கூடும் என, எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 15 கிலோ கொண்ட ஒரு டின் கடலை எண்ணெயின் விலை, 2,000 ரூபாயை தாண்டும் என, ராஜ்காட் எண்ணெய் சந்தையின் முன்னணி வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

**பணவீக்கத்தை சமாளிக்க உணவு தானியங்கள் வீணாவதை தடுக்க வேண்டும் : உலக வங்கி**

செப்டம்பர் 26,2011,04:27



புதுடில்லி : தெற்காசியாவில், குறிப்பாக இந்தியாவில் பணவீக்கத்தை சமாளிக்க வேண்டுமென்றால், உணவு தானியங்கள் வீணாவதை தடுக்க வேண்டும் என உலக வங்கி அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து இவ்வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 2000மாவது ஆண்டில், இந்திய உணவு கழகம் கொள்முதல் செய்த உணவு தானியங்களில் 1 -1.6 கோடி டன் வீணாகியுள்ளது. உணவு தானியங்களை சேமித்து வைக்க போதுமான கிடங்குகளோ அல்லது அவற்றை பாதுகாக்கும் தொழில்நுட்ப வசதிகளோ இல்லாததால், இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்திய உணவு கழகத்தின் இயலாமை காரணமாக, உணவு தானியங்களை கொள்முதல் செய்வதில் பெருத்த இழப்பும், அவற்றை கையாள்வதற்கான செலவும் அதிகரித்துள்ளது. தனியார் நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது, உணவு தானியங்களை கொள்முதல் செய்வது மற்றும் கிடங்குகளில் சேமிப்பது ஆகியவற்றுக்காக, இந்திய உணவு கழகம் அதிகம் செலவழிக்கிறது. உணவுதானியங்களின் கொள்முதல் செலவு அதிகமாக உள்ளதால், ஒட்டுமொத்த மொத்த நிதிச் செலவினம் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்கிறது. நாட்டில்

உற்பத்தி செய்யப்படும் நெல், கோதுமை ஆகியவற்றில் மூன்றில் ஒரு பங்கை, இந்திய உணவுக் கழகம் கொள்முதல் செய்து வருகிறது. இத்துடன், மக்காச் சோளம், கம்பு உள்ளிட்ட உணவு தானியங்களை, அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்கிறது. இந்த உணவு தானியங்கள், பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பொது வினியோகத் திட்டத்தின் கீழ், மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. வருவாய் பெருகி வருவதற்கேற்ப, உணவுப் பொருள்களின் தேவை அதிகரித்து வருகிறது. எனினும், இவற்றில், உணவு தானியங்களுக்கான தேவையை விட, பருப்பு வகைகள், பழங்கள், மாமிசம், முட்டை மற்றும் பால்பொருள்களுக்கான தேவை இரு மடங்கு உயர்ந்துள்ளது. இந்தியா மற்றும் பாகிஸ்தானில் வேளாண் துறை சார்ந்த பொது வினியோக திட்டத்தால், நிதிச் செலவினம் அதிகரிக்கிறது. எனினும், இது உணவு தானிய உற்பத்தியை உயர்த்தவும் துணை புரிகிறது. அதே சமயம், உணவுப் பொருள் பணவீக்க உயர்வு, உணவுப் பொருள் விலையேற்றம் ஆகியவை, உணவு தானியங்கள் சாராத இதர உணவுப் பொருள்களின் அளிப்பு குறைவதற்கு காரணமாக உள்ளன. மானியம் வழங்கப்படுவதன் காரணமாக, நீர் வளங்கள் அளவிற்கு மீறி பயன்படுத்தப்படுகின்றன. மின்சார பயன்பாட்டால் அதிக செலவினம் ஏற்படுகிறது. ரசாயன உரங்களால் நிலத்தின் தன்மை பாதிக்கப்படுகிறது. இத்தகைய செலவினங்கள், உற்பத்தியை அதிகரிக்க துணை புரிபவையாக இல்லை. இதற்கு பதிலாக, வேளாண் வளர்ச்சியை அதிகரிக்கவும், வறுமையை ஒழிக்கவும், வேளாண் ஆராய்ச்சி, கல்வி மற்றும் கிராமப்புறங்களில் சாலை வசதிகள் ஆகியவற்றில் முதலீடு மேற்கொள்வது பயனளிக்கும். இந்தியாவில் 90'களில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உணவு மற்றும் உரங்களுக்கான மானியம் ஒரு சதவீதமாக இருந்தது. இது, 2008-09ம் நிதியாண்டில் 1.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்தியா மற்றும் பாகிஸ்தானில் ஓரளவிற்கும், பொது வினியோகத்திற்காக மேற்கொள்ளப்படும் அதிக அளவிலான கொள்முதல், தனியார் துறையை பாதிப்பதாக உள்ளது. வரிகள் மற்றும் ஒரு மாநிலத்தில் இருந்து வேறொரு மாநிலத்திற்கு உணவு தானியங்களை கொண்டு செல்வதற்கு உள்ள கடுமையான விதிமுறைகள் ஆகியவையும், தடைக்கற்களாக உள்ளன. சணல் பேக்கேஜிங்கிற்கான விதிமுறைகள், அடிக்கடி திருத்தப்படும் அத்தியாவசிய விளைபொருள்கள் சட்டம், உணவு தானியங்களை சந்தைப்படுத்தும் துறையில் குறைவாக உள்ள தனியார் முதலீடு, சங்கிலித் தொடர் வினியோகத்தில் போதுமான முதலீடு இல்லாதது மற்றும் சந்தைப்படுத்துவதில் உள்ள விதிமுறைகள் ஆகியவை வளர்ச்சியை பாதிப்பதாக உள்ளன. பொது பணவீக்கத்தை கட்டுப்படுத்த, உணவு தானிய சேமிப்பு நிர்வாகம் உள்ளிட்ட ஐந்து அம்ச கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும். முன்னேறிய நாடுகளை விட, தெற்காசிய நாடுகளில், உணவு தானிய தேவை சார்ந்த நிர்வாக கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். நீண்ட கால அடிப்படையில், உணவுப் பொருள்களின் விலையை கட்டுப்படுத்த, வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது, புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது, நீர் மேலாண்மை திட்டத்தை மேலும் செம்மையாக

செயல்படுத்துவது உள்ளிட்டவை தொடர்பான கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். மேலும், ஊரக கட்டமைப்பை மேம்படுத்துவது, பரந்துபட்ட விவசாயம், வேளாண் துறை மற்றும் சந்தைப்படுத்தும் துறைகளில் தனியார் முதலீட்டை அதிகரிப்பது உள்ளிட்டவை குறித்தும் கொள்கைகளை உருவாக்கி செயல்படுத்த வேண்டும். எந்த அளவிற்கு அத்தியாவசியமான ஊட்டச் சத்துள்ள உணவு தானியங்களை உருவாக்குவது என்பது குறித்தும், ஊட்டச் சத்தின் தேவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பட்ஜெட் அறிவிப்புகளால் பாதிக்கப்பட்ட பிரிவுகளைக் கண்டறிந்து, அவற்றின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். இவ்வாறு உலக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சாம்பார் வெங்காயம் சாகுபடிசங்கராபுரம் பகுதியில் அமோகம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2011,00:51 IST

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் சாம்பார் வெங்காய சாகுபடி அமோகமாக உள்ளது.சங்கராபுரம் வட்டம் புதுபாலப்பட்டு, அரசம்பட்டு, நெடுமானூர், பொய்குனம், காட்டுகொட்டாய், குளத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் சாம்பார் வெங்காயம் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கடந்தாண்டு கிலோ 10 ரூபாய் விலையில் விற்கப்பட்ட சாம்பார் வெங்காயம் இந்தாண்டு கிலோ 30 முதல் 40 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கிறது.அறுவடை செய்யும் நேரத்தில் ஆத்தூர், வேலூர், திருவண்ணாமலை, திருச்சி உள்ளிட்ட பகுதி வியாபாரிகள் நேரடியாக வந்து வெங்காயத்தை கொள்முதல் செய்கின்றனர்.இதனால் இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் சாம்பார் வெங்காயத்தை சாகுபடி செய்துள்ளனர்.

**440 ஏக்கரில் 2 லட்சத்து 10 ஆயிரம் மரக்கன்று :மரம் நடும் விழாவில் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2011,01:53 IST

சேலம்: ""ஓமலூர் அருகே உள்ள கன்னப்பாடியில் 440 ஏக்கர் நிலத்தில், 2 லட்சத்து 10 ஆயிரம் மர கன்றுகள், 144 விவசாயிகள் மூலம் நடப்படும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது,'' என்று கிராம சீரமைப்பு மற்றும் வளர்ச்சி திட்டம் சார்பில் நடந்த மரம் நடும் விழாவில், இயக்குனர் ரங்கசாமி தெரிவித்தார். சேலம், மூவேந்தர் அரங்கத்தில் கிராம சீரமைப்பு மற்றும் வளர்ச்சி திட்டம் சார்பில் மரம் நடும் திட்ட துவக்க விழா நடந்தது. இதில், திட்ட ஒருங்கிணைப்பாளர் நல்லதம்பி

வரவேற்றார். இயக்குனர் ரங்கநாதன் தலைமை வகித்தார். விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி, எம்.எல்.ஏ.,பல்பாக்கி கிருஷ்ணன் விழாவை துவக்கி வைத்தார். இதில் இயக்குனர் ரங்கநாதன் பேசியதாவது: ஓமலூர் அருகே உள்ள கன்னப்பாடி கிராமத்தில், 144 விவசாயிகள் மூலம், 440 ஏக்கர் பரப்பளவில், 2 லட்சத்து 10 ஆயிரம் மர கன்று நடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மா, தேக்கு, புளி, சவுக்கு, சில்வர் ஓக் உள்ளிட்ட பலவகை மரங்கள் நட திட்டமிடப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றம், மழை வளம், விவசாய உற்பத்தி, உணவு பற்றாகுறை ஆகியவற்றை போக்க, அனைவரும் மரகன்றுகளை நடவு செய்ய வேண்டும், என்றார். அனைத்து நாடுகளிலும், 2011ம் ஆண்டு, சர்வதேச வன நாளாக கடை பிடிக்கப்பட்டு, மரகன்றுகளை நடுவதில் அக்கறை காட்டி வருகின்றன. மரம் நடுவதன் மூலம் பருவநிலை மாற்றம், வன விலங்குகள் பெருக்கம், மழை வளம் அதிகரிக்க அரசு, தன்னார்வ அமைப்புகள் கடும் முயற்சி மேற்கொண்டுள்ளன. ஆண்டு தோறும், ஒன்றரை லட்சம் ஹெக்டேர் காடுகள் அழிக்கப்படுகிறது. ஒரு ஹெக்டேர் காடு மூலம், 15 டன் கார்பன்-டை-ஆக்ஸைடு சேமிக்கப்படுகிறது. காடுகள் அழிக்கப்படுவதால், மழை வளம் குறைவு, நீர் பிடிப்பு பகுதிகள் வறட்சி, விவசாய உற்பத்தி குறைவு மற்றும் ஆண்டுக்கு மூன்று மாதம் கூட மழை பெய்யாத சூழல் உருவாகிடும். வறட்சி, காற்று பற்றாக்குறை, உணவு பொருள் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்படும். இதே நிலை நீடித்தால், வரும் 2030ம் ஆண்டு 30 சதவீதம் உணவு உற்பத்தி குறையும். பருவநிலை மாற்றம் ஏற்படவும், உணவு உற்பத்தி பெருகவும், மழை வளம் உயரவும் மர கன்றுகளை அனைத்து பகுதியிலும் வைத்து, இயற்கை சூழல் மேம்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மரம் நடு விழாவில் தெரிவிக்கப்பட்டது. பாண்டுரங்கன், பொன்னுசாமி, கோவிந்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பயறு வகைகளில் மகசூல் அதிகரிக்க டி.ஏ.பி., கரைசல் :பயன்படுத்த வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2011,00:09 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள பயறுவகைகளில் மகசூலை பெருக்க விவசாயிகள் தவறாமல் டி.ஏ.பி., கரைசலை தெளிக்க வேண்டும் என்று வேளான் இணை இயக்குனர் நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு பருவத்தில், 22 ஆயிரம் ஹெக்டேரில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முக்கியமாக துவரை, உளுந்து, பச்சைபயறு, காராமணி மற்றும் மொச்சை போன்ற பயறு வகை பயிர்கள் பிரதானமாக பயிரிடப்பட்டுள்ளது. சாகுபடி செய்யப்பட்டுள்ள இந்த பயிர்கள் சில இடங்களில் வளர்ச்சி நிலையிலும், சில இடங்களில் பூக்கும் தருவாயிலும் உள்ளது. நெல், கரும்பு, பருத்தி, வாழை போன்ற பயிர்களுக்கு கடைபிடிக்கப்படும் தொழில்நுட்பங்களில் காட்டும் ஆர்வத்தை

விவசாயிகள் பயறுவகை சாகுபடியில் பின்பற்றுவதில்லை. மேலும் பயறு வகை பயிர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரும்பாலும் மானாவாரி பயிராகவும், ஊடுபயிராகவும் பயிரிடப்படுவதால் எதிர்பாக்கும் மகசூலை பெற முடிவதில்லை. பயறு வகைபயிர்களுக்கு பரிந்துரைக்கப்படும் தொழில் நுட்பங்களான விதை நேர்த்தி, உயிர் உர பயன்பாடு, மண்ணின் தன்மைக்கு ஏற்ப உரமிடுதல், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மற்றும் பயிர் பாதுகாப்பு போன்றவற்றை கடைபிடிக்காத நிலையில் குறைந்த மகசூல் கிடைப்பதால் விவசாயிகளுக்கு போதிய வருமானம் கிடைக்காமல் போய்விடுகிறது. குறிப்பாோக பயறு வகை பயிர்களில் பூக்கும் பருவத்தில் மேற்கொள்ளவேண்டிய முக்கிய தொழில் நுட்பமான டி.ஏ.பி., கரைசல் தெளிப்பதை கடைபிடித்தாலே அதிக மகசூல் பெற முடியும். பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி., கரைசல் தெளிப்பதால் இலை வழியாக தழை மற்றும் மணி சத்துகள் கிரகிக்கப்படுகிறது. இதனால் பூக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதோடு பூக்கள் உதிர்வதும் வெகுவாக குறைக்கப்படுகிறது. இதன் பயனாக அதிக காய்கள் பிடிப்பதோடு திரட்சியான விதைகள் உருவாகின்றது. இதன் மூலம் மகசூல் அதிகரிகப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 5 கிலோ டி.ஏ.பி., உரத்தை, 10 லிட்டர் நீரில் இரவு முழுக்க ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலை தெளிந்த கரைசலை மட்டும் எடுத்து தேவையான அளவு நீரில் கலந்து கைத்தெளிப்பானால் செடிகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். பூ பிடிக்கும் தருணத்தில் ஒரு முறையும், பிறகு 15 நாட்கள் கழித்து மறுமுறையும் ஆக இரு முறை தெளிக்க வேண்டும். காலை அல்லது மாலை வேலையில் தான் டி.ஏ.பி., கரைசலை தெளிக்க வேண்டும். டி.ஏ.பி., கரைசல் தெளிக்கும் பொழுது மண்ணில் போதுமான அளவு ஈரம் இருக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் பயறுவகை பயிர்களில் 25 சதவீதம் வரை மகசூல் பெருகும். பயறு வகைகளில் இலை வழியாக டி.ஏ.பி., கரைசல் தெளிப்பிற்கு தேவைப்படும் டி.ஏ.பி., உரம் மானிய விலையில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் விநியோகம் செய்யப்படவுள்ளது. எனவே, பயறு வகை சாகுபடி செய்துள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் தவறாது டி.ஏ.பி., கரைசல் தெளித்து அதிக மகசூல் பெற்று பயன் அடையாளம். இது குறித்து மேலும் விவரங்கள் அறிய விரும்பும் விவசாயிகள் அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு அணையிலிருந்து நீர் திறப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2011,01:37 IST

உடுமலை : உடுமலை அருகே அமராவதி அணையிலிருந்து, புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு, நேற்று நீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம், திருப்பூர் மாவட்டத்தில், 25 ஆயிரத்து 250 ஏக்கர் நிலங்கள் பயன் பெற உள்ளன. உடுமலை அருகேயுள்ள அமராவதி அணையிலிருந்து பழைய

ஆயக்கட்டு மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு நீர் திறக்கப்படுகிறது. பயிர்களை பாதுகாக்க, புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு நீர் திறந்து விட வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதன்படி, நேற்று, புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு நீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் திருப்பூர் மாவட்டம் உடுமலை தாலுகாவில், 13 ஆயிரத்து 250 ஏக்கர், தாராபுரம் தாலுகாவில் 12 ஆயிரம் ஏக்கர் என, 25 ஆயிரத்து 250 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. வரும் 2ம் தேதி வரை நீர் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சின்ன வெங்காய விலை: விவசாயிகளுக்கு பெரிய கவலை!**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,22:14 IST

பேரூர் : ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்டாலும், சின்னவெங்காயத்துக்கு எதிர் பார்த்த விலை கிடைக்காததால் வெங் காயம் பயிரிட்டுள்ள விவசாயிகள் பேரும் கவலையில் உள்ளனர். தொண்டாமுத்தூர், ஆலாந்துறை வட்டாரங்களில் 5,000 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. ஆண்டுதோறும், ஜனவரி முதல் வாரம், மே இரண்டாம் வாரங்களில் நடவு செய்யப்பட்டு, ஜூலை கடைசி வாரம் முதல் செப்டம்பர் இரண்டாம் வாரம் வரை அறுவடைப்பணிகள் நடக்கும். ஒரு ஏக்கருக்கு 6 டன்னிலிருந்து 8 டன் வரை, மொத்தம் 20 ஆயிரம் டன் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு, பதப்படுத்தி விற்பனைக்காக, இப்பகுதியில் பட்டறைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.
சின்ன வெங்காயம், இந்தியாவில் 50 சதவீதம் மட்டுமே பயன் படுத்தினாலும், தாய்லாந்து, வியட்நாம், இந்தோனேசியா, சிங்கப்பூர், துபாய், மலேசியா, இலங்கை உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சின்னவெங்காயம் ஏற்றுமதி ரகம் என்பதால், ஒரு கிலோ 25 முதல் 30 ரூபாய் வரைக்கும் விலைகொடுத்து வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். இதை மனதில் வைத்தே, இப்பகுதி விவசாயிகளில் அதிக அளவில் சின்னவெங்காயம் பயிரிட்டு வருகின்றனர். கடந்த இரு வாரங்களுக்கு முன், வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு திடீர் தடைவிதித்தது. இதனால், வெங்காயங்கள் பட்டறைகளிலே தேக்கமடைந்தன. வியாபாரிகள் விலை கேட்டு வராததாலும், ஒரு கிலோ எட்டு ரூபாய்க்கு கூட வாங்க ஆளில்லை. இதனால், விவசாயிகள் நொந்து போயிருந்த நிலையில், வெங்காய ஏற்றுமதிக்கான தடையை மத்திய அரசு கடந்த நான்கு நாட்களுக்கு முன் நீக்கியது. ஆனாலும், வெங்காயத்துக்கு எதிர்பார்த்த விலை கிடைக்காமலும், வியாபாரிகள் அதிக அளவு வராததாலும் வெங்காய விவசாயிகள் கவலையில் உள்ளனர். தொண்டாமுத்தூரைச் சேர்ந்த வெங்காய விவசாயி பாப்பு என்பவர் கூறுகையில்,"சின்னவெங்காயம் பயிரிட, ஒரு ஏக்கருக்கு 50 ஆயிரம் வரை செலவு செய்ய வேண்டியுள்ளது. மத்திய அரசு விதித்த தடையால், வெங்காயம்

இருப்பானதோடு, வியாபாரிகளும் வரவில்லை. தடை நீக்கப்பட்டிருந்தாலும், எதிர்பார்த்த விலையில்லை. கிலோ 17, 18க்கு குறைவாகவே வியாபாரிகள் கேட்கின்றனர். தினமும் 25 லோடு( ஒரு லோடுக்கு 10 ஆயிரம் டன்) செல்லும் சூழ்நிலையில், தற்போது 6 லோடுக்கு குறைவான அளவு வெங்காயங்கள் மட்டுமே விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன," என்றார்.

**வெங்காயம் சாகுபடி: விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,22:32 IST

பல்லடம் : வெங்காய ஏற்றுமதிக்கு தடை நீங்கியதால் பொங்கலூர், சுல்தான்பேட்டை விவசாயிகள், விதை வெங்காயம் வாங்கி வந்து சாகுபடி செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். சுல்தான்பேட்டை, பொங்கலூர் வட்டாரங்களில் குள்ளம்பாளையம், கேத்தனூர், உகாயனூர், பொல்லிகாளிபாளையம், கொடுவாய், ஜல்லிப்பட்டி, மந்திரிபாளையம், வாவிபாளையம், செஞ்சேரிமலை, செஞ்சேரிபுத்தூர், செலக்கரிச்சல், சுல்தான்பேட்டை, வாரப்பட்டி, மானாசிபாளையம் உட்பட பல இடங்களில் ஒவ்வொரு பருவமும் குறைந்த பட்சம் 8,000 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை செய்யப்படுகிறது. 30 நாட்கள் நாற்றங்கால் இட்டு பின், பாத்திகளில் நடவு செய்யப்படும் சின்னவெங்காயம், 90 நாளில் அறுவடைக்கு வருகிறது. நேரடியாக விதைவெங்காயம் ஊன்றி அதன் மூலம் சாகுபடி செய்யப்படும் சின்ன வெங்காயம், விதை ஊன்றிய 70 நாளில் அறுவடைக்கு வருகிறது. வெங்காயம் ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்து இருந்ததால் கடந்த இரண்டு மாதங்களாக சின்ன வெங்காயம் கொள்முதல் விலை கிலோ குறைந்தபட்சம் 13 ரூபாய்; அதிகபட்சமாக 15 ரூபாயை தாண்டவில்லை. இவ்விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியானதாக இல்லை. இதனால் வெங்காய விவசாயிகள் கலக்கமடைந்தனர். கடந்த சில தினங்களுக்கு முன் மத்திய அரசு வெங்காயம் ஏற்றுமதிக்கான தடையை நீக்கி அறிவித்தது; சின்னவெங்காயம் கொள்முதல் விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது; வெங்காயத்திற்கு நல்ல கொள்முதல் விலை கிடைக்கும் என்ற ஆர்வத்தில் சுல்தான்பேட்டை, பொங்கலூர் பகுதி விவசாயிகள் பலர், துறையூர் சென்று ஆர்வமுடன் விதை வெங்காயம் வாங்கி வருகின்றனர்.

**கால்நடைத்துறையை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,22:21 IST

திருப்பூர் : மாவட்ட கால்நடைத்துறை மேம்பாட்டு பணிக்காக மாநில அரசு 96 லட்சம் ரூபாய் ஒதுக்கியது. உள்ளாட்சித் தேர்தல் முடிந்த பின் இந்நிதியை கொண்டு பராமரிப்பு பணி

மேற்கொள்ளப்படும். கால்நடைத்துறையை மேம்படுத்த, பால்வளத்தை பெருக்க இலவச ஆடு, மாடு வழங்கும் திட்டத்தை, தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது. மாவட்டத்தில் உள்ள கால்நடைகள், அவற்றை பாதுகாக்க ஏற்படுத்திய கால்நடை மருத்துவமனைகள், துணை நிலையங்கள், மருந்தகங்கள் விவரம் பெறப்பட்டு, தற்போது கால்நடை மருத்துவமனைகளை பராமரிக்க, கிளை நிலையங்களை மேம்படுத்த, கட்டட பராமரிப்பு பணி மேற்கொள்ள தமிழக அரசு, 96 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியது.
கால்நடைத்துறை அதிகாரிகள் கூறிய தாவது: சிகிச்சைக்காக கால்நடை அதிகளவில் அழைத்து வரப்படும் கிளை நிலையங்களை தரம் உயர்த்தப்படுகிறது; 15 வேலம்பாளையம், கணபதிபாளையம், சாமிக்கவுண்டம்பாளையம், கணியூர், மேட்டுப்பாளையம் (வெள்ளகோவில்) ஆகிய கிளை நிலையங்களுக்கு தலா 11.6 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. உடுமலை, திருப்பூர், வெள்ளகோவில் தலா பத்து லட்சம்; கரட்டுப்பாளையம், ராமச்சந்திராபுரம் ஆகிய கால்நடை மருத் துவமனைகளில் கட்டங்களில் விரிசல், எலக்ட்ரானிக், எலக்ட்ரிக்கல் பணிக்காக தலா 6 லட்சம் ரூபாய் என மொத்தம் 96 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; காங்கயம், தாராபுரம், பெட்டைகாளிபாளையம் ஆகிய கிளை நிலையங்களுக்கு நிதி ஒதுக்கி தர கோரப் பட்டுள்ளது, என்றனர்.

**சம்பா பருவ சாகுபடிக்கு நெல் விதைகள் இருப்பு வைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,22:27 IST

உடுமலை : சம்பா பருவ சாகுபடிக்கு தேவையான நெல் விதைகள் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) திருமகள்ஜோதி அறிக்கை: உடுமலை வட்டாரத்தில் வரும் சம்பா பருவ சாகுபடிக்காக அரசு சான்று பெற்ற ஏடிடி.45., ரக நெல் விதைகள் (ஆதார நிலை மற்றும் சான்று நிலை) வினியோகத்திற்காக வட்டார வேளாண் விரிவாக்க மையத்திலும், குறிச்சிக்கோட்டை துணை வட்டார கிடங்கிலும் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. வம்பன் 3, டிஎம்வி 1, ஏடிடி 45 ரக சான்று நிலை உளுந்து மற்றும் டிஎம்வி 7 ரக சான்று நிலை நிலக்கடலை விதைகளும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையம் மற்றும் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். வாளவாடியில் வேளாண்துறையில் சிறு, குறு விவசாயிகளாக பதிவு செய்துள்ள அனைத்து விவசாயிகளும் இன்று (26ம் தேதி) தங்களுடைய சாகுபடி நிலத்தின் மண் மாதிரிகளை சேகரித்து பரிசோதனைக்காக அளிக்க வேண்டும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,01:11 IST

உடுமலை :உடுமலை அருகே மரிக்கந்தை கிராமத்தில், வேளாண்துறை சார்பில், விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் செல்வராஜ் வரவேற்று, வேளாண் துறையின் மானியத் திட்டங்கள், நடப்பு பருவத்தில் வழங்கப்பட உள்ள இடுபொருட்கள் குறித்து பேசினார்.வேளாண் இணை இயக்குனர் முத்துசாமி தலைமை வகித்து, விதை கிராம திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் மூன்று கட்டமாக நடத்தப்படும் பயிற்சியின் நோக்கம் குறித்தும், சென்னை வேளாண் இயக்குனரக துணை இயக்குனர் சந்தான கோபால கிருஷ்ணன், விவசாயிகளின் அடிப்படை விபரங்கள் சேகரிப்பது, மண் மாதிரி மற்றும் பரிசோதனை அடிப்படையில் உர மேலாண்மையை விவசாயிகள் பின்பற்றுவது குறித்து பேசினர். சாகுபடியில் விதையின் முக்கியத்துவம், விதை தேவை மற்றும் வினியோகத்தின் இடைவெளியை குறைத்து, தங்களுக்கு தேவையான விதை தேவையை, விவசாயிகளே விதைப்பண்ணை அமைப்பது மற்றும் விதை சட்டம் குறித்து, விதை சான்று அலுவலர் ராஜாராம் பேசினார். விருகல்பட்டி மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள் பங்கேற்றனர். விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள், பெதப்பம்பட்டி வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம் என தெரிவிக்கப்பட்டது. விருகல்பட்டி பாசன சபை தலைவர் குணராஜ் நன்றி கூறினார்.

## விலை அதிகரிப்பு; பருத்தி பயிரிடும் பரப்பு இரட்டிப்பு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,22:14 IST

அன்னூர் : அதிக விலை கிடைப்பதால், அன்னூர் வட்டாரத்தில் பருத்தி பயிரிடும் பரப்பு இரு மடங்காக அதிகரித்துள்ளது. அன்னூர் வட்டாரத்தில் மானாவாரியாக சோளம் 15 ஆயிரத்து 400 ஏக்கரிலும், பயறு வகைகள் 2,500 ஏக்கரிலும், எண்ணை வித்துகளும் பயிரிடப்படுகின்றன. தண்ணீர் வசதி உள்ள தோட்டங்களில் வாழை, கரும்பு மற்றும் மஞ்சள் பயிரிடப்படுகிறது. மானாவாரியாக பயிரிடப்படும் பருத்தியின் பரப்பளவு போதிய விலை மற்றும் விளைச்சல் இல்லாத காரணத்தால் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வந்தது. கடந்த ஆண்டு 160 ஏக்கரில் மட்டுமே பருத்தி பயிரிடப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டில் பருத்திக்கான தேவை அதிகரித்ததன் எதிரொலியாக, பருத்தி விலை கணிசமாக உயர்ந்தது. மற்ற பயிர்கள் பயிரிட்ட விவசாயிகளை விட, பருத்தி பயிரிட்ட விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைத்தது. இதனால், இந்த ஆண்டில் பருத்தி பயிரிடும் பரப்பு அதிகமாகவுள்ளது. பிற பயிர்களை பயிரிட்ட விவசாயிகளும், பருத்தி

பயிரிட முன் வந்துள்ளனர். கஞ்சப்பள்ளி பகுதியில் பருத்தி பயிரிட்ட விவசாயிகள் கூறியதாவது: சாதாரண பருத்தி பயிரிட்டபோது பயிர் விளைச்சல் குறைவாக இருந்தது. பருத்திச் செடியிலிருந்து, பருத்தியை பறித்து, தோட்டத்து சாளைக்கு கொண்டு சென்று, மூட்டை போட்டு, மார்க்கெட்டுக்கு கொண்டு செல்ல அதிக செலவாகிறது.மழையும் சரியாக பெய்யவில்லை.

விலையும் கட்டுபடியாகும் அளவுக்கு இல்லை. விளைச்சலும் குறைவு. இந்த காரணங்களால் பல விவசாயிகள் பருத்தியிலிருந்து, சோளம் மற்றும் எண்ணை வித்து பயிர்களுக்கு மாறி சென்றனர். ஆனால், கடந்த ஒன்றரை ஆண்டாக பருத்திக்கு நல்ல விலை கிடைக்கிறது. ஆர்.சி. எச்.,-2, ஆர்.சி.எச்-20 ஆகிய பி.டி., (மரபணு மாற்றப்பட்ட) ரகங்கள் அதிக மகசூலை கொடுக்கின்றன.

இதனால் ஓரளவு கட்டுபடியாகும் விலை கிடைக்கிறது. எனவே பல விவசாயிகள் இந்த சீசனில் பருத்தி பயிரிட்டுள்ளனர். பருத்தி பயிரிடும் விவசாயிகளுக்கு பி.டி., ரக விதையை அரசு இலவசமாக வழங்கி, பருத்திக்கு உள்ளூர் மார்க்கெட்டுகளிலும், மத்திய அரசு அறிவித்துள்ள குறைந்த பட்ச கொள்முதல் விலையில் விவசாயிகளிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு கஞ்சப்பள்ளி விவசாயிகள் தெரிவித்தனர்.இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் சீனிராஜ் கூறியதாவது:அன்னூர் வட்டாரத்தில் கடந்த ஆண்டு 160 ஏக்கரில் இருந்த பருத்தி இந்த ஆண்டு 320 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் பல விவசாயிகள் பருத்தி பயிரிட்டுள்ளனர். பி.டி., ரக பருத்தி காய்ப்புழுவை மட்டும்தான் கட்டுப்படுத்தும். எனவே, விவசாயிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த உரிய மருந்து தெளிக்க வேண்டும். தண்டு கூன் வண்டுகளை கட்டுப்படுத்த முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். "போரூரட் 10 ஜி' குருணை மருந்தை வேர்ப்பகுதியில் இட்டு மண் அணைக்கலாம்.

பருத்தி காய் பருமனாகவும், எடை கூடவும், நுண்ணூட்டசத்து இட வேண்டும். நுண்ணூட்ட சத்து மானியத்தில் வழங்கப்படுகிறது. பருத்தி சேகரிக்கும்போது தூசு, மண், முடி கலக்காதபடி சேகரித்தால் கூடுதல் விலை கிடைக்கும். ஊடுபயிராக பாசிப்பயறு பயிரிடலாம்.

கூடுதல் வருமானம் பெறலாம்.இவ்வாறு சீனிராஜ் தெரிவித்தார். அன்னூர் வட்டாரத்தில் இன்னும் இரு வாரங்களில் பருத்தி பறிக்கும் பணி துவங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தென்னையில் கருந்தலைப் புழு தாக்குதல் பொங்கலூர் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,22:08 IST

பொங்கலூர் : பொங்கலூர் பகுதியில் தென்னை மரங்களில் கருந்தலைப் புழு தாக்குதல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.பொங்கலூர் வட்டாரத்தில் தென்னை மரங்களில் கருந்தலைப் புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளது. இப்புழுக்களால் தாக்கப்பட்ட தென்னை மரத்தின் ஓலைகள் வறண்டு காணப்படும். புழுக்கள் ஓலையில் உள்ள பச்சையத்தை உணவாக உட்கொள்வதால், தென்னை ஓலைகள் தீயில் காய்ந்தது போல் காட்சியளிக்கும். புழுக்கள் சாப்பிட்ட ஓலைகள் வறண்டு, மரங்களுக்கு தேவையான உணவு தயாரிக்க முடியாமல் போகிறது. இதனால், மரம் பட்டு போக வாய்ப்பாகிறது. வேளாண் துறை அலுவலர்கள் கூறுகையில், "வெயில் காலத்தில் கருந்தலைப் புழுக்களின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதை விவசாயிகள் ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்த வேண்டும். இதை மூன்று வழிகளில் கட்டுப்படுத்தலாம்; ஒட்டுண்ணிகள் விட்டும், வேரில் நுவாக்ரான் மருந்தை செலுத்தியும், ஸ்பிரேயர் மூலம் நுவாக்ரான் மருந்தை லிட்டருக்கு இரண்டு மில்லி வீதம் கலந்து தெளித்தும் கட்டுப்படுத்தலாம். ஒட்டுண்ணிகள் கோவை வேளாண் பல்கலை மற்றும் ஆழியாறு பகுதியிலுள்ள தனியார் நிறுவனங்களில் கிடைக்கின்றன. மழை நன்றாக பெய்தால் இதன் தாக்குதல் குறையும்,' என்றனர்.

**மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய் தாக்குதலால் மகசூல் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,23:17 IST

சிறுபாக்கம்:சிறுபாக்கம், வேப்பூர், மங்களூர் பகுதிகளில் மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் காரணமாக பல மகசூல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.மங்களூர், சிறுபாக்கம், வேப்பூர் உள்ளிட்ட 1,000க்கும் மேற்பட்ட கிராமப்புற விவசாயிகள் தங்களின் நீர்பாசன நிலங்களில் பணப்பயிரான கோ 1, கோ 2, எருமத்தளி, ஈரோடு 2 ஆகிய ரக மஞ்சள் பயிரினை பயிரிடுவது வழக்கம்.கடந்த ஆண்டு குவிண்டால் ஒன்றுக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை ஈரோடு மஞ்சள் கொள்முதல் மார்க்கெட்டில் அதிக விலை கிடைத்தது.

இதனால் நடப்பாண்டில் கிராமப்புற விவசாயிகள் கடந்த ஆண்டைவிட 3 மடங்கு அளவில் மஞ்சள் பயிரை ஜனவரி, டிசம்பர் மாதங்களில் பயிர் செய்தனர். இப்பயிரில் தற்போது கடந்த ஒரு வாரமாக இலைப்புள்ளி நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது.

மிக வேகமாக இந்நோய் பரவுவதால் மஞ்சள் செடிகள் காய்ந்து பட்டுப்போகும் நிலை ஏற்படுகிறது. நோய் தாக்குதல் ஏற்பட்டு மஞ்சள் தோட்டங்களில் கடும் மகசூல் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது.இதனால் பல லட்சம் ரூபாய் செலவிட்டு பயிரிட்டுள்ள விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.

**முழு மானியத்தில் தோட்டக்கலை பயிர்சாகுபடி செய்ய வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,23:12 IST

பண்ருட்டி:அண்ணாகிராமம் வட்டாரத்தில் முழுமானியத்தில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்து பயன்பெற தோட்டக்கலை உதவி இயக்குனர் பிரேமா வேண்டுகோள் விடுத்துள்ளார்.அண்ணாகிராமம் வட்டாரத்தில் கெடிலம் உபவடி நிலப்பகுதிகளில் நீர்வள நிலவளத்திட்டம் சார்பில் குடிதாங்கி, சித்தரசூர், பாலூர், நத்தம், பல்லவராயநத்தம், எய்தனூர், பி.என்.பாளையம், பண்டரக்கோட்டை, சன்னியாசிபேட்டை, எழுமேடு, அகரம், தொட்டி ஆகிய கிராமங்களில் ஏரிப்பாசன பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.இத்திட்டத்தின்கீழ் புதிய பரப்பு விரிவாக்கம் இனத்தின்கீழ் கொய்யா, சப்போட்டா, வாழை, கத்திரி, வெண்டை, முல்லை ஆகிய பயிர்களில் செயல்விளக்கம் அமைக்க விதை, செடிகள், பூச்சி மருந்து, உரம் உள்ளிட்ட இடுபொருட்கள் தோட்டக்கலைத்துறை மூலம் முழு மான்யத்தில் வழங்கப்படுகிறது. எனவே தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்திட ஆர்வமுள்ள இப்பகுதி விவசாயிகள் தோட்டக்கலை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.
இவ்வாறு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பிரேமா விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளார்.

**வேளாண் கல்லூரி மாணவிகள்சிவாயம் கிராமத்தில் களப் பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,23:12 IST

சிதம்பரம்:சிதம்பரம் அருகே சிவாயம் கிராமத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள் தங்கி விவசாயிகளுக்கு நவீன தொழில் நுட்பங்களை கற்றுக் கொடுத்து வருகின்றனர்.சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புல இறுதியாண்டு மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தில் 12 மாணவிகள் சிதம்பரம் அடுத்த சிவாயம் கிராமத்தில் தங்கி நேரடி செய்முறை பயிற்சி பெற்று வருகின்றனர்.பயிற்சியின் போது அந்த கிராமத்தில் உள்ள விவசாயிகள், விவசாய தொழிலாளர்களுக்கு விவசாய நவீன தொழில்

நுட்பங்களை கற்பித்து வருகின்றனர். கிராமப்புற வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நடைபெறும் வேலையில் அவர்களுக்கு உறுதுணையாக உள்ளனர். ஊராட்சித் தலைவர் நாராணசாமி உதவிகளை செய்து வருகிறார்.

**பார்த்தீனிய செடி அழிப்புவிழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,23:11 IST

விருத்தாசலம்:விருத்தாசலம் பகுதியில் வேளாண் வணிகத் துறை சார்பில் பார்த்தீனிய செடி அழிப்பு விழிப்புணர்வு முகாம் நடந்தது.விருத்தாசலம் அடுத்த குப்பநத்தம், சிறுவரப்பூர், சேப்பாக்கம் உள்ளிட்ட பல பகுதிகளில் வேளாண் வணிகத்துறை சார்பில் நடந்த முகாமில் செடியின் தன்மை, மனிதன் மற்றும் விலங்குகளுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள் பற்றியும், பார்த்தீனியத்தை கொண்டு மண்புழு உரம் தயாரித்தல் பற்றி விளக்கப்பட்டது.கோட்ட வேளாண் அலுவலர் அமுதா, உதவி வேளாண் அலுவலர்கள் அருள்பிரகாசம், அறிவழகன், ஜெயபால், சிவக்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

**பயிர் காப்பீட்டு பிரிமியம் தொகையை குறைக்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,23:00 IST

கிள்ளை:கூட்டுறவு கடன் சங்கத்தில் செலுத்தப்படும் விவசாய பயிர் காப்பீட்டு பிரிமியம் தொகையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.சிதம்பரம் அருகே உள்ள விவசாயிகள் பாசிமுத்தான் ஓடை மற்றும் கான்சாகிப் வாய்க்கால் மூலம் வரும் காவிரி தண்ணீரை நம்பி 14 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் விவசாயம் செய்து வருகின்றனர்.சம்பா பருவத்தில் மழை நீர் தேங்கியும், நவரை சாகுபடிக்கு போதுமான தண்ணீர் இல்லாமலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வந்தனர்.விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பீட்டை சரி கட்டும் வகையில் இழப்பீட்டுத் தொகை வழங்கவும், கூட்டுறவு கடன் சங்கம் மூலம் பெறும் விவசாய கடன்களுக்கு பயிர்பாதுகாப்புத் தொகை செலுத்தவும் அரசு உத்தரவிட்டது. அதன்பேரில் விவசாயிகள் பதிவு செய்து காப்பீட்டுத் தொகை செலுத்தி வந்தனர்.

கிள்ளை, தில்லைவிடங்கன், சி.முட்லூர் மற்றும் பிச்சாவரம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். தற்போது இழப்பீட்டுத் தொகை 5 மடங்காக உயர்த்தி அரசு திடீர் உத்தரவிட்டுள்ளது.இதனால் வங்கியில் பெறும் கடன் தொகைக்கு

தனியாரிடம் பெறும் வட்டித் தொகையை விட இந்த காப்பீட்டுத் தொகை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் புலம்புகின்றனர்.மேலும், அரசு முறைப்படி அறிவிக்காமல் கலெக்டர்கள் மூலம் சம்மந்தப்பட்ட கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அறிவித்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு அதிகளவில் இழப்பீடு ஏற்படும் நிலை உள்ளது.ஒரு சதவீதத்தை எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் ஐந்து மடங்காக அறிவித்திருப்பது விவசாயிகளை கடும் பாதிப்பிற்கு ஆளாக்கியுள்ளது. எனவே இந்த தொகையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மீன் விலை குறைந்தது**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,02:18 IST

முதுநகர்:புரட்டாசி மாதம் எதிரொலியாக மார்க்கெட்டில் மீன்கள் விலை கணிசமாக குறைந்துள்ளது.புரட்டாசி மாதத்தில் இந்துக்கள் பலரும் அசைவ உணவுகளை தவிர்ப்பது வழக்கம். இதனால் அசைவ உணவு வகை மீன்கள் விற்பனை வளாகத்தில் மக்கள் கூட்டம் வெகுவாக குறைந்துள்ளது.மீன் விற்பனை குறைந்துள்ளதால், மீன்கள் விலையும் கணிசமாக குறைந்துள்ளது.கடலூர் முதுநகர் மீன் மார்க்கெட்டில் கடந்த மாதம் கிலோ 120க்கு விற்பனை செய்யப்பட்ட சங்கரா மீன் 80 ரூபாய்க்கும், கிலோ 400க்கு விற்ற வஞ்சரம் 280 ரூபாய்க்கும், 200க்கு விற்ற பாறை மீன் 140க்கும், கிலோ 250க்கு விற்ற இறால் 150க்கும், கிலோ நண்டு 160இருந்து 120 ரூபாயாக விலை வீழ்ச்சியடைந்துள்ளது.மீன்களின் விலை குறைந்துள்ளதால் அசைவ பிரியர்கள்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. புரட்டாசி மாதத்தில் முதல் சனியான நேற்று மீன் விற்பனை மிகவும் மந்தமாக இருந்தது.

**வேளாண்தொழில்நுட்பகூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,02:13 IST

சிதம்பரம்:புவனகிரி அடுத்த உடையூரில் நவீன வேளான் தொழில் நுட்ப விளக்கக் கூட்டம் நடந்தது.ஊராட்சித் தலைவர் மகாதேவன் தலைமை தாங்கினார். தொழில் நுட்ப விளக்கங்களை அண்ணாமலைப் பல்கலைக் கழக வேளாண் கல்லூரி பேராசிரியர்கள் கனகசபாபதி, ஜெய்சங்கர் ஆகியோர் எடுத்துரைத்தனர். தலைமை ஆசிரியை மைதிலி பேசினார். ஏற்பாடுகளை வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் செய்திருந்தனர்.

**வெய்யலூர் கிராமத்தில் வேளாண் மாணவர்கள் முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,01:56 IST

சிதம்பரம்:வெய்யலூர் கிராமத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக வேளாண்புல இறுதி ஆண்டு மாணவர்கள் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர்.சிதம்பரம் அடுத்த வெய்யலூர் கிராமத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புலம் இறுதியாண்டு மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர். வேளாண் பணி அனுபவ துவக்க விழாவில் ஊராட்சித் தலைவர் புஷ்பவள்ளி காசிநாதன் தலைமை தாங்கினார். மாணவர் தமிழ்செல்வன் வரவேற்றார். முன்னாள் தலைமை ஆசிரியர் ராமதாஸ், உதவி பேராசிரியர் சண்முக ராஜா, திட்ட பொறுப்பாளர் ஜெயவேலு பங்கேற்றனர்.மாணவர் தங்கராஜ் நன்றி தெரிவித்தார்.

**காபி விவசாயிகள் கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,22:11 IST

தாண்டிக்குடி:காபி வாரியம், கடந்த ஆண்டு முதல், பருவகால மழை காப்பீடு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம், திண்டுக்கல், தேனி, சேலம், கோவை மாவட்டங்களில் காபி விவசாயிகளுக்காக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.இத்திட்டம், அக்., 1 முதல் நவம்பர் வரை பெய்யும் மழை அளவு; பின்பருவ கால மழை காப்பீட்டு திட்டம், டிச., 1 முதல் 2012 பிப்ரவரி வரை பெய்யும் மழை அளவின்படியும் கணக்கிடப்படுகிறது. பருவகால மழை காப்பீட்டு திட்டத்தில் இணைய செப்., 27 கடைசி நாள்.பின்பருவ கால காப்பீடு திட்டத்தில், நவ., 25 கடைசி நாள். 25 ஏக்கர் வரை விவசாயம் செய்வோருக்கு, காப்பீட்டு தொகையில் 50 சதவீதம், மானியமாக, காபி வாரியத்தால் வழங்கப்படும். காபி விரிவாக்க பிரிவு தொடர்பு அலுவலகம், முதுநிலை தொடர்பு அலுவலகங்களை அணுகி பயனடையலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கம்பு விளைச்சல் அதிகரிப்புவிலை திடீர் குறைவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2011,21:48 IST

தேனி:கம்பு விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.தேனி மாவட்டத்தில் மக்காச்சோளம் 50 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது. கம்பு சாகுபடியும்

5,000 ஏக்கரில் நடக்கிறது. மக்காச்சோளத்திற்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. கோழிப்பண்ணையாளர்கள் விலை கொடுக்க தயாராக உள்ளனர். அதே நேரம் கம்பு விலை குறைந்துள்ளது.கடந்த மாதம் 1,500 ரூபாய் வரை விற்றது. தற்போது 1,100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில் விலை சரிவால் கம்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

---

தினகரன்

**92% டீத்தூள் விற்பனையும் அதிகரித்தது**

பதிவு செய்த நாள் : 9/26/2011 0:32:22



குன்னூர் : குன்னூர் தனியார் ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 38வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளி கிழமைகளில் நடைபெற்றது. மொத்தம் 11.39 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது.

ரஷ்யா, பாகிஸ்தான் உள்ளிட்ட வெளிநாட்டு வர்த்தகர்கள் எண்ணிக் கை அதிகளவில் இருந்தது. உள்நாட்டு வர்த்தகமும்  களை கட்டியது. 92 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ஸி2 வரை விலை அதிகரித்தது.

**உப்பு உற்பத்தி மும்முரம் தொழிலாளர் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : 9/26/2011 0:31:53



அதிராம்பட்டினம் : தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினம், ஏரிபுறக்கரை, கீழத்தோட்டம், மறவக்காடு ஆகிய கடற்கரை பகுதிகளில் 3 ஆயிரம் ஏக்கர் உப்பளங்கள் உள்ளன.
இந்த உப்பளங்களில் உப்பு உற்பத்திக்கான முதல் கட்ட பணிகள் கடந்த ஜனவரி மாதம் தொடங்கியது. இதற்கிடையில் 4 முறை மழை பெய்து உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது.
தற்போது தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளில் கடந்த 15 நாட்களாக பரவலான மழை பெய்து வருகிறது.

ஆனால் அதிராம்பட்டினம் பகுதியில் மழை இல்லாமல் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் உப்பு உற்பத்தியாளர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
இதுபற்றி உப்பு உற்பத்தியாளர் ராஜேந்திரன் கூறுகையில், கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் மழை தீவிரமாக பெய்ததால் உற்பத்தியை நிறுத்தியிருந்தோம். இந்த ஆண்டு பல இடங்களில் மழை பெய்தாலும் அதிராம்பட்டினம் பகுதியில் தொடர்ந்து வெயில் தாக்கம் அதிகமாக உள்ளதால் உப்பு உற்பத்தி பணி மும்முரமாக நடந்து வருகிறது என்றார்.

# குன்னூர் ஏல மையத்தில்

# 90 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், செப்.26–
தேயிலை தூள் தேவை அதிகரிப்பு காரணமாக குன்னூர் ஏல மையத்தில் சுமார் 90 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. மேலும் ரூ.2 வரை அனைத்து ரக தேயிலை தூள்களுக்கும் விலை உயர்வு ஏற்பட்டது.

ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலையை வாங்கி வருகின்றனர்.

விற்பனை எண் 38–க்கான ஏலம் கடந்த 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 11 லட்சத்து 35 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 7 லட்சத்து 79 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 56 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

90 சதவீதம் விற்பனை

ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் ஆர்வத்துடன் பங்கு பெற்றனர். இலை ரகமும், டஸ்ட் ரகமும் விறுவிறுப்பாக விற்பனை ஆனது. இதனை தொடர்ந்து 90 சதவீத தேயிலை தூள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

தேயிலை தூளுக்கு கிராக்கி இருந்ததால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 2 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டது. சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந் தபட்ச விலையாக ஒரு கிலோ 137 ரூபாய்க்கு சென்றது.

இலை ரகம்

195 ரூபாய் என்பது ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக இருந்தது. சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 41 ரூபாயில் இருந்து 49 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 124 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 47 ரூபாயில் இருந்து 51 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 135 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 39–க்கான ஏலம் வருகிற 29, 30 ஆகிய தேதிகளில் நடக் கிறது. ஏலத்திற்கு மொத்தம்12 லட்சத்து 43 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

# நீர் வளம் குறித்த கருத்தரங்கு

ஊட்டி, செப்.26–
ஊட்டியில் உள்ள மத்திய மண் மற்றும் நீர் ஆராய்ச்சி நிலையம் சார்பில் ஊட்டி மோனர்க் ஒட்டலில் இன்று (திங்கட்கிழமை) ‘நீராதாரங் களை கண்டறிதல் மற்றும் செயல்படுத்துதல்’ என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற உள்ளது.
இந்த கருத்தரங்கில் தமிழ்நாடு கேரளா, கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா, அஸ்சாம் உள்ளிட்ட மாநிலங் களை சேர்ந்த உயர் அதிகாரி கள் கலந்து கொள்கின்றனர். இந்த கருத்தரங்கில் தமிழ்நாடு நீராதார மேம்பாட்டு கழக செயல் இயக்குனர் மகேஷன் காசிராஜன், திட்டம் மற்றும் வளர்ச்சி இணை செயலாளர் சுடலை நாராயணன் உள்பட பலர் கலந்து கொள்கின்றனர். இந்த தகவலை மத்திய மண் மற்றும் நீர் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி மணிவண்ணன் தெரிவித்து உள்ளார்.